[1987 நவம்பர் 16

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுக்கைகள் எங்கே போகின்றன என்று தெரியவில்லை. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்பச் சுகாதார நிலையத்தை மேல்நிலைச் சுகாதார நிலையமாக மாற்றும் பொறுப்பு அரசுக்கு உண்டு. நிதி நிலை சரியாகும்போது மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அதுபற்றி ஆவன செய்யலாம்.

தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய்ப் பிரிவு.

122—(*வினா எண். 8331) திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் மன நோய் பிரிவு துவங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தாலுக்கா அரசு மருத்துவமனைகளில் மனநோய் பிரிவு இன்னும் துவங்கப்படவில்லை. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவு ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் பல்வேறு பிரிவு நோய்களுக்கான மருத்துவ வசதிகள் உள்ளன. இதனால் ஏழையெளிய மக்கள் அங்கே வந்து இலவசமாக மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள். இப்போதெல்லாம் கிராமங்களில் எங்கே பார்த்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும், வருடந்தோறும் 4, 5 பேர்களுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏழையெளிய மக்கள் சென்னைக்கு வந்து, தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அளவுக்கு நிதிவசதியில்லாதவர்களாக இருப்பதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்களின் நலனுக்காகவே பாடுபட்டு வருகிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெறும் வகையில் தாலுக்கா அரசு பொது மருத்துவமனைகளில் எல்லாம் இத்தகைய சிகிச்சைக்கான பிரிவை ஏற்படுத்த முன்வருமா ?

1987 நவம்பர் 16]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ஆண்டுதோறும் 4, 5 பேர்களுக்கு மனநோய் பிடித்துவிடுகிறது என்று உறுப்பினர் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அது தவறு. எல்லா இடங்களிலும் அப்படி இருக்க முடியாது. அது புதிய கருத்தாக இருக்கிறது. அரசு ஒப்புக்கொண்ட கொள்கைப்படி எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்பிரிவை ஏற்படுத்திய பின்பு நிதிநிலைக்கு ஏற்ப, தாலுக்கா மருத்துவமனைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம்.

தென்காசி மாணவர் விடுதி.

123—(*வினா எண். 8956) **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறையுடன் இணைந்து இருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதியில் ஆதி திராவிட மாணவர்களுக்காக கட்டப்பட்ட மாடி அறைகள் 74 மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்திருந்த காலத்தில் தென்காசியில் கட்டப்பட்ட மாணவர் விடுதி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக தற்போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விடுதியின் மாடியில் 12 அறைகள் மட்டுமே உள்ளன. இவ்விடுதியின் ஒப்பளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 60 ஆகும். எனவே, மாடியிலுள்ள 12 அறைகளும் காலியாக உள்ளன. விடுதியில் அதிக இடவசதி இருப்பதால், கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஆதி திராவிடர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும் பிரிக்கப்பட்ட நேரத்தில் இந்த விடுதியைப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தன்னிடம் வைத்துக்கொண்டது. இந்தத் துறையானது 10 ஆண்டுக் காலமாக அறைகளை மூடி வைத்திருக்கிறது. திறப்பு விழா அன்றைக்கு போட்ட கோலங்கள் கூட அப்படியே இருக்கின்றன. மாணவர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருப்பதால்